**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,**
**KANNIYAKUMARI AT NAGERCOIL.**

21.07.2025

O.S. No. 291/2022

P.W.1 திரு. ஆரோக்கியதாஸ்

சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (3 மற்றும் 4 ஆம் பிரதிவாதிகள் தரப்பில்) -**

வா.சா.ஆ. 9 ஆவணத்தில் எனது அப்பா 1961 ல் ஏற்பட்ட செற்றில்மெண்ட் ஆவணத்தை பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 9 ஆவணத்தை சார் பதிவாளர் அலுவலகத்தில் சென்று தயார் செய்யும்போதும் என்னிடம் சொல்லவில்லையா என்றால் கடைசியாக சொன்னார். வா.சா.ஆ. 9 உயில் ஆவணத்தை தயார் செய்வதற்கு நான் போயிருந்தேனா என்றால் இல்லை, அந்த ஆவணம் இருந்ததே 2 வருடத்திற்கு பிறகுதான் தொியும்.அப்பாவும், அம்மாவும் எனது பிறந்தநாள் அன்று சேர்ந்து கொடுத்தார்கள். வா.சா.ஆ. 9 உயில் ஆவணத்தை நான் தயார் செய்து எனது அப்பாவை ஏமாற்றி கையொப்பம் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. அதனால்தான் வழக்கு சொத்து குறித்த விவரங்களை வா.சா.ஆ. 9 ல் சரியாக சொல்லவில்லை என்றால் சரியல்ல, விவரங்கள் சரியாகதான் சொல்லியுள்ளார். வா.சா.ஆ. 12 முதல் 24 வரையில் உள்ள ஆவணங்கள் இந்த வழக்கிற்கு தொடர்பு இல்லாதவை என்றால் சரியல்ல, தொடர்பு உண்டு. வா.சா.ஆ. 25 ஆவணம் யாருடைய பெயரில் இருக்கிறது என்றால் கண்ணாடி போட்டு வராததால்

அதில் என்ன உள்ளது என்று என்னால் படிக்க முடியவில்லை. 1 வது பிரதிவாதி, 3 ஆம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த செற்றில்மெண்ட் பத்திரம் என்றால் என்னால் படிக்க முடியவில்லை.அதனால் எனக்கு தொியாது. அந்த ஆவணம் சட்டப்படி செல்லும் என்றால் சரியல்ல, செல்லாது. வா.சா.ஆ. 26 முதல் 29 வரையில் உள்ள ஆவணங்கள் இந்த வழக்கிற்கு தொடர்பு இல்லாதவை என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 9 உயில் பத்திரத்தை எனது அப்பாவை கட்டாயப்படுத்தி எழுதி வாங்கியதால்தான் அவர் எழுதி வைத்த செற்றில்மெண்ட் பத்திரம் பற்றிய விவரங்கள் இல்லை என்றால் சரியல்ல. அப்பா ஏற்கனவே 1 ஆம் பிரதிவாதிக்கு செற்றில்மெண்ட் செய்து கொடுத்த சொத்தை குறித்து வா.சா.ஆ. 9 உயில் எழுதப்பட்டுள்ளதால் அது செல்லாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வாக்குமூல பிரமாண பத்திரத்திலும், கூடுதல் வாக்குமூல பிரமாண பத்திரத்திலும் சொல்லியுள்ளவை இந்த வழக்கிற்கு தொடர்பு இல்லாதவை என்றால் சரியல்ல. அவை பொய்யானவை என்றாலும் இந்த வழக்கிற்கு தேவையற்றவை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கின் 1 ஆம் பிரதிவாதி 87 வயதான மிக மூத்த குடிமகள் என்றால் சரிதான். அவரை வழக்கு சொத்து வீட்டில் அனுமதிக்காமல் நான் அந்த சொத்தை கட்டுப்பாட்டில் வைத்து வசிக்கிறேன் என்றால் சரியல்ல. அவர் வீட்டிற்கு அடிக்கடி வந்து போய் கொண்டுதான் இருந்தார். கடைசியாக வீட்டிற்கு எப்போது வந்தார் என்றால் 2019 ல் வந்தார். 1 ஆம் பிரதிவாதியை கஷ்டப்படுத்தி, நஷ்டப்படுத்துவதற்காகதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1 ஆம் பிரதிவாதிக்கு 1961 ல் ஏற்படுத்திய செற்றில்மெண்ட் படி உரிமை இருப்பதால் தாவா சொத்து குறித்து 3 ஆம் பிரதிவாதிக்கு செற்றில்மெண்ட்

செய்ய உரிமை உள்ளது என்றால் சரியல்ல. அப்பா எழுதியது செற்றில்மெண்ட் ஆவணமே அல்ல, அது ஒரு உயில். 1, 3 மற்றும் 4 வது பிரதிவாதிகள் கஷ்டப்படுத்துவதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றாலும் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றாலும் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (1 ஆம் பிரதிவாதி தரப்பில்) -**

3 மற்றும் 4 ஆம் பிரதிவாதிகள் தரப்பில் மேலே செய்த குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.